# சூழ்நிலையியல்

## இரண்டாம் வகுப்பு

### மூன்றாம் பருவம்

# 1. காற்று

பாடலை நிறைவு செய்வோமா!



காற்று வந்ததும்
சன்னல் திறந்தது
சன்னல் திறந்ததும்
தாள்கள் பறந்தன.

காற்று வந்ததும்
மரம் அசைந்தது
மரம் அசைந்ததும்
இலைகள் உதிர்ந்தன

காற்று வந்ததும்
கொடி அசைந்தது
கொடி அசைந்ததும்
துணிகள் காய்ந்தன.

காற்று வந்ததும்
________________
________________
________________

காற்று வந்ததும்
________________
________________
________________



படத்தைப் பாருங்கள், வினாவிற்கு விடை சொல்லுங்கள்.

- தென்னங்கீற்றுகள் ஏன் அசைகின்றன ?
- பட்டம் எதனால் பறக்கிறது ?
- ஊதிய பலூனில் என்ன இருக்கும் ?
- காற்றாலை எதனால் சுழல்கிறது ?

நம்மைச் சுற்றிலும் காற்று நிரம்பியுள்ளது.
காற்றை நம் கண்களால் பார்க்க முடியாது.
காற்றை உணரலாம்.

## சுவாசம்



மூக்கின் ஒரு புறத்தை அழுத்தி, மறுபுறத்தின் வழியாகக் காற்றை இழுப்போம். இழுக்கும் போது காற்று உள்ளே செல்வதை உணர்கிறோம்.




காற்றை நீங்கள் வெளிவிடும்போது மூக்கின் அருகில் விரலை வைத்துப் பாருங்கள். காற்று வெளியேறுவதை உணரலாம்.

- காற்று மூக்கின் வழியாக உள்ளே சென்று வெளியே வருவதை நாம் சுவாசம் என்கிறோம்.
- நாம் உயிர் வாழ சுவாசிக்க வேண்டும். அதற்குக் காற்று அவசியம்.




தாவரங்கள், விலங்குகள் மற்றும் மனிதர்கள் சுவாசிக்க காற்று அவசியம்.


சூழ்நிலையியல்



மீனின் வாயிலிருந்து நீர்க் குமிழ்கள் வெளிவருகின்றன. அது ஏன் தெரியுமா ?

## காற்றின் வேகத்தை அறிவோமா !


காற்றின் வேகத்தின் அடிப்படையில் 1, 2, 3 என, எண்கள் இட்டு வரிசைப் படுத்துவோமா !



- மெதுவாக வீசும் காற்று இதமான காற்று.
- வேகமாக வீசும் காற்று புயல் காற்று.
- மிக வேகமாகச் சுழன்று வீசும் காற்று சூறாவளி.


சூழ்நிலையியல்

## காற்றின் திசையை அறிவோமா ?



காற்றடைத்த பலூனை,
நூலால் கட்டிப் பறக்கவிடுங்கள்.
அது எந்தத் திசையை நோக்கிப்
பறக்கிறதோ அத்திசையே
காற்று வீசும் திசையாகும்.

சரியான செயலை (✓) எனவும், தவறான செயலை (✗) எனவும், குறியிடுங்கள்.





## சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து கோடிட்ட இடங்களை நிரப்புவோமா!



கால்பந்தின் உள்ளே __________ நிரம்பியுள்ளது.

( காற்று / நீர் )

பட்டம் எந்தத் திசையை நோக்கிப் பறக்கிறதோ அந்தத்திசை ______________ ஆகும்.

( காற்று வீசும் திசை / காற்று வீசும் திசைக்கு எதிர் திசை)







காற்று மூக்கின் வழியாக உள்ளே சென்று வெளியே வருவதை ______________ என்கிறோம்.

( சுவாசம் / செரித்தல்)

காற்றாலை மூலம் __________ தயாரிக்கப்படுகிறது.

( மின்சாரம் / ஒளி )





மெழுகுவத்தி எரிய ஏதுவான காற்று ______________ ஆகும்.


( மெதுவாக வீசும் காற்று / வேகமாக வீசும் காற்று )



## விசிறி செய்வோமா !


- காகிதத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.
- உங்களுக்குப் பிடித்த ஓவியத்தை வரைந்து வண்ணம் தீட்டுங்கள்.
- வண்ணம் தீட்டிய காகிதத்தை மாற்றி மாற்றி மடித்து அதன் கீழ்ப் பகுதியை அழுத்திப் பிடித்துக் கொள்ளுங்கள்.
- விசிறிப் பாருங்கள். காற்று வருகிறதா ?

## மெழுகுவத்தி ஏன் அணைந்தது என்று உன்னால் சொல்ல முடியுமா ?



பலூன் ஏவுகணை செய்து விடுவோமா!

அது மேலே செல்வதைப் பாய்ந்து பிடிப்போமா!



பலூன் ஏவுகணை மேலே செல்வதை உற்று நோக்குங்கள்

பலூன் ஏன் மேலே செல்கிறது என்று கூறுங்கள்...

நீரில் பலூன் படகு விடுவோமா!

அது அழகாய் மிதந்து செல்வதைக் கண்டு ரசிப்போமா!



பலூன் படகு நீரில் செல்வதை உற்று நோக்குங்கள்...

நீரில் பலூன் படகு முன்நோக்கிச் செல்கிறது ஏன் ?

**உங்களுக்குத் தெரியுமா ?**

மிதி வண்டி, இருசக்கர வாகனம், நான்கு சக்கர வாகனம், ஆகாய விமானம் போன்றவை இயங்குவதற்கு என்னென்ன தேவை ?

